தினமணி

## அஸ்வினி, மாவு பூச்சிகளை கட்டுப்படுத்த கோரிக்கை

First Published : 16 May 2012 07:08:34 AM IST

குளித்தலை, மே 15: கோடைமழை சரியாக பெய்யாத காரணத்தால், விவசாய நிலங்களில் அதிகரித்துவரும் அஸ்வினி, மாவுப் பூச்சிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாரதிய கிசான் சங்க மாவட்டத் தலைவர் எம். சண்முகம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்தது:

ஆறுகளில் பெருமளவு அள்ளப்படும் மணலால், நிலத்தடி நீர் வற்றி போதிய அளவு மழை பெய்வதில்லை. மழை இல்லாத காரணத்தால், விவசாய பயிர்களையும், மரப்பயிர்களையும் அளிக்கும் பூச்சிகள் அதிகரித்துள்ளன. கடந்த 12 ஆண்டுகளாக தென்னை சிலந்தி தென்னை மரத்தை தாக்கி அதன் வளர்ச்சியை பாதித்தது.

மாவுப் பூச்சி எனப்படும் கள்ளிப்பூச்சி கள்ளிச் செடிகளை முற்றிலும் அழித்தது. இதன் பின்னர் பப்பாளி, மரவள்ளிக் கிழங்கு உள்ளிட்ட பயிரிலும் பாதிப்பு ஏற்பட்டன. கடந்த 3 வருடமாக நெல், வாழை, கரும்பு, காய்கறி பயிர்கள், செம்பருத்தி, கொய்யா, பூவரசம் உள்ளிட்ட மரப்பயிர்களை மாவுப் பூச்சிகள் தாக்கின. வேப்பமரம் பயிர்களை தாக்கிவந்த பூச்சிகளை ஈர்த்து, தன் மரத்திலுள்ள பச்சையத்தை உண்ண வைத்து அவற்றை அழித்து வந்ததோடு, மற்ற பயிர்களை பூச்சிகள் தாக்காமல் பாதுகாத்து வந்தது. இதனால் வேப்பமரத்தின் நுனி இலை கருகி காய்ந்து விடுகின்றன. போதியமழை இல்லாத காரணத்தால், அதிக வெப்பத்தை தாக்கு பிடிக்க முடியாமல் வேப்பமரங்கள் காய்ந்து வருகின்றன. இதனால் மாவு மற்றும் அஸ்வினி பூச்சிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது.

எனவே இப்பூச்சிகளை கட்டுபடுத்தத் தேவையான ஒட்டுண்ணி அட்டைகளை அனைத்து கிராமப்பகுதிக்கும் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

## கோடையில் பிஞ்சு வெள்ளரி சாகுபடி

பதிவு செய்த நாள் : மே 16,2012,00:00 IST



கோடைப்பட்டத்தில் நல்ல வருவாயினைத் தருவது பிஞ்சு வெள்ளரி சாகுபடி. இந்தப்பயிர் சிறு விவசாயிகளுக்கு மிகவும் ஏற்றது. இவர்கள் சாகுபடியை அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர்தான் செய்ய இயலும். கிணற்றுப்பாசனம் இருந்தாலும் அதில் மின்சார மோட்டார் பம்ப் செட் இருக்காது. டீசல் இன்ஜின் கொண்டு பாசனம் செய்யும் வசதிதான் இருக்கும்.

பிஞ்சு வெள்ளரி சாகுபடி என்பது வெள்ளரிக்காய் பிஞ்சாக இருக்கும்போதே அறுவடை செய்து விற்று பயன்பெறும் தொழிலாகும். இதன் வயது 90 நாட்கள். பிஞ்சினை அப்படியே விட்டால் அது மிகப்பெரிய காயாகி அதிக விதைகளைக் கொண்டிருக்கும். இதனை விற்று லாபம் எடுக்க முடியாது.

மிகச்சிறிய பிஞ்சுகள், நீளம் ஆறு அங்குலத்திற்குள் இருக்கும். இவைகள் மிகச்சுவை கொண்டதாக இருக்கும். ஒரு விதைகூட காயில் இருக்காது. இத்தகைய காய்களை விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் கிலோ ரூ.8 கொடுத்து வாங்கி பின்னால் தாங்கள் காய்களை கிலோ ரூ.15 வரை விற்கின்றனர்.

இரண்டாம் தரக் காய்கள் 9 அங்குலம் நீளம் வரை இருக்கும். இதன் விலை கிலோ ரூ.10 வரை இருக்கும்.

பெரிய பிஞ்சுகள் 10-11 அங்குலம் இருக்கும். இதன் விலை கிலோ ரூ.5 வரை இருக்கும்.

முதல் இரண்டு தரம் கொண்ட காய்கள் சிரமம் இன்றி விற்பனையாகிவிடும். மூன்றாம் தரக்காயில் விற்பனை சில சமயம் பிரச்னையாக இருப்பதுண்டு. பிஞ்சு வெள்ளரி சென்னையைச் சுற்றி சிறப்பாக சாகுபடி செய்யப்படுகிறது. மார்க்கெட்டில் இருந்து வியாபாரிகள், வண்டியில் கிராமத்திலுள்ள விவசாயிகள் நிலங்களுக்கு நேரில் சென்று பிஞ்சு வெள்ளரியை விலைக்கு வாங்குகின்றனர். விவசாயிகளும் காய்களை மார்க்கெட்டிற்கு எடுத்துச் சென்று விற்கின்றனர். **சாகுபடி விவரங்கள்:** விவசாயிகள் தனது டீசல் ஆயில் இன்ஜின் செட்டினை உபயோகித்து பாசனம் செய்து வெள்ளரி சாகுபடி செய்கின்றனர். விவசாயி ஒரு ஏக்கரில் சாகுபடி செய்வார். இதற்குத்தேவையான விதையை தயார் செய்து கொள்கிறார். ஏக்கருக்கு 150 கிராம் விதையை உபயோகப்படுத்துவார். விதை வாங்கும் இடத்தில் வெள்ளை குட்டைக்காய் விதை வேண்டும் என்று கேட்டு வாங்க வேண்டும். விதை தி.நகரில் பூச்சி மருந்து விற்கப்படும் கடைகளில் கிடைக்கும். விவசாயி தனது நிலத்தை டிராக்டர் கொண்டு ஒரு உழவு செய்துவிட்டு நிலத்திற்கு மூன்று டிரெய்லர் லோடு மக்கிய தொழு உரத்தை இட்டு அதனை வயல் பூராவும் மண்ணோடு சீராக கலக்க உழுதுகொள்கிறார். பிறகு ஏக்கரில் 600 குழிகள் போட்டுக்கொள்கிறார். நிலத்திற்கு அடியுரமாக ஒன்று - ஒன்றரை மூடை பேக்ட் அம்மோபாஸ் உரத்தைப் போட்டு மண்ணோடு கலக்குகிறார். நிலத்திலுள்ள குழிகளில் இயற்கை உரமும் ரசாயன உரமும் உள்ளது. உடனே குழிக்கு மூன்று விதைகள் விதைத்து தண்ணீர் ஊற்றுகிறார். நிலத்திலுள்ள குழிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் விடுகிறார். இவ்வாறு 15 நாட்கள் செய்துவிட்டு பிறகு நிலத்தில் கால்வாய் போட்டு பாசனம் செய்கிறார். குழிகள் அனைத்திற்கும் ஏக்கருக்கு ஒன்று - ஒன்றரை மூடை பாரமாபாஸ் 20:20 உரம் இடுகிறார். குழிகளில் களைச்செடிகளை குச்சிகள் உபயோகித்து அகற்றுகிறார். செடிகள் நன்கு பூக்கள் பிடித்து காய்கள் காய்க்கத் தொடங்கும். சாகுபடி சமயம் விவசாயி தனது பயிரினை பூச்சிகள், பூஞ்சாளங்கள் தாக்காமல் இருக்க தக்க பயிர் பாதுகாப்பு முறைகளை அனுசரிக்கிறார்.

பிஞ்சு வெள்ளரி பயிரின் மொத்த வயது 90 நாட்கள். இந்த சாகுபடியில் பயிரில் விதைத்த 45வது நாளிலிருந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் அறுவடையில் கீழ்க்கண்டபடி வருமானம் கிட்டுகின்றது.

முதல் தர காய் 80 கிலோ து ரூ.15 = ரூ. 1,200.00

இரண்டாம் தர காய் 100 கிலோ து ரூ.10 = ரூ. 1,000.00

மூன்றாம் தர காய் 100 கிலோ து ரூ.5 = ரூ. 500.00

மொத்தம் ரூ.2,700.00 து 20 அறுவடை = ரூ.54,000.00.

சாகுபடி செலவு= ரூ.27,450.00.

நிகர லாபம் = ரூ.26,550.00

கோடை காலத்தில் குறுகிய நாட்களில் பலன் தரும் பிஞ்சு வெள்ளரி சாகுபடி "சிறு விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்' என்று சொல்வது பொருத்தமாகும்.-எஸ்.எஸ்.நாகராஜன்.

## நவீன தொழில்நுட்பம்

பதிவு செய்த நாள் : மே 16,2012,00:00 IST

விவசாயத்தில் நானோ தொழில்நுட்பம்: நானோ தொழில்நுட்பம் என்பது மூலக்கூறு அல்லது அணு அளவில் ஒரு பொருளினை மாற்றம் செய்வதாகும். இந்தியா விலேயே முதன் முதலாக தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை உருவாக்கியுள்ளது.

**மண்வளப்பாதுகாப்பு**: மண்வளத்தை பாதுகாப்பது பயிர் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. பயிருக்கு அளிக்கப்படும் சத்துக்களில் பெரும்பாலானவை களிமண்ணில் ஒட்டிக் கொள்வதால் பயிருக்கு சரியான விகிதத்தில் கிடைப்பதில்லை. ஆனால் நானோ தொழில்நுட்பத்தின்மூலம் இதனை மாற்ற முடியும். நானோ துகள்கள் களிமண்ணில் ஒட்டிக்கொள்வதால் பயிர்ச்சத்துக்கள் களிமண்ணில் ஒட்டுவது தடுக்கப்பட்டு பயிருக்கு தேவையான அளவு கிடைக்கிறது.

**நானோ உரங்கள்:** நானோ உரங்களுக்கு ஜியோலைட் மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இதன் முதற்கட்ட ஆராய்ச்சியில் நானோ உரங்களிலிருந்து பயிருக்கு தேவையான நைட்ரஜன் சத்து நாற்பது நாட்கள் வரையிலும் நானோ உரங்களிலிருந்து சீராக வெளியாகிறது. நானோ உரங்கள் பயிருக்கு தேவையான சத்துக்களை சரியான விகிதத்தில் தக்க முறையில் கிடைக்க வழிசெய்கிறது. மேலும் உரத்துகள்கள் நானோ படலம் கொண்டு பூசுவதால் சத்துக்கள் வெளியாவது தடுக்கப் படுகிறது. பயிர்களின் சரிவிகித சத்து தேவைக்காக எல்லாத்தேவையான சத்துக்களையும் உள்ளடக்கிய நானோ கம்போஸ்ட்டை உருவாக்க முடியும்.

**களைக்கொல்லிகள்:** விவசாயப் பல்கலைக்கழகத்தில் நானோ களைக்கொல்லிகள் உருவாக்கப் பட்டுள்ளன. களைக்கொல்லியின் மூலக்கூறுகளைத் தேவையான இடத்தில் வெளியிடுவதால் களைகளில் வளர்ச்சி கட்டுப்படுத்தப் படுகிறது. பாலிமர் பொதிந்த களைக்கொல்லிகள் மண்ணில் உள்ள ஈரப்பதத்திற்கேற்ப வெளியாகி அதிலுள்ள வேதிப்பொருட்களை விதைகளின் முளைப்புத்திறனைக் குறைத்துவருகிறது. இதன்மூலம் களைக்கொல்லிகளின் திறன் அதிகரிக்கிறது.

**விதைகளின் முளைப்புத்திறன் மேம்பாடு**: கார்பன் நானோ குழாய்கள் விதைகளின் தோலை விரிவடையச் செய்தும் நீக்கி கதவுகளாகச் செயல்பட்டு விதைகளின் முளைப்புத் திறனை அதிகரிக்கின்றன. இந்த கார்பன் நானோ குழாய்கள் மண்ணின் ஈரப்பதம் குறைவாக உள்ள நிலையிலும் முளைப்புத்திறனை அதிகரிக்கிறது.

**பயிர் நோய்களைக் கண்டறிதல்**: நானோ துகள்களை பயிர்களில் நோயின் தாக்கத்தை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தேவையான பூசனக்கொல்லியை தேவையான இடத்தில் வெளியிடச்செய்ய முடியும். இதன்மூலம் விளைச்சல் குறைவதைத் தடுக்க முடியும். நானோ சென்சார்கள் மூலம் பயிரில் உள்ள பிரச்னைகளையும் உடனடியாக தெரிந்துகொள்ளலாம்.

நானோ தொழில்நுட்பத்தின் மூலம் வேளாண் பொருட்களைத் தரப்படுத்துவதும் சாத்தியப்படுகிறது.

நானோ உயிரி தொழில்நுட்பத்தின்மூலம் உணவு, பயிர்ச்சத்துக்களுக்குத் தேவையான மூலக்கூறுகள், புரதத்தைக் கண்டு பிடிப்பதற்கான புதிய உபகரணங்கள் பற்றியும் விலங்குகளின் கழிவிலுள்ள நச்சான பைட்டோ டாக்சிக் நோய்க் காரணிகளைக் கண்டுபிடிப்பதும் சாத்தியமாகும்.

நானோ தொழில்நுட்பம் உணவியல் துறையில் பெரும்பங்கு வகிக்கிறது.

மண், நீர் மாசுபடுவதை நானோ துகள்கள் மூலம் தடுப்பது குறித்து ஆராய்ச்சிகளும் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (**தகவல்:** முனைவர் ப.முருகேசபூபதி, துணைவேந்தர், த.வே.பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 003)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## மல்லிகை விவசாயிகள் கவனத்திற்கு...

பதிவு செய்த நாள் : மே 16,2012,00:00 IST



மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் விவசாயிகள் சிறப்பாக மல்லிகை சாகுபடி செய்து விமானங்கள் மூலம் ஏற்றுமதி செய்து வருகின்றனர். ஆனால் கோடை காலம் துவங்கிவிட்டது. பூ மொட்டுகள் பழுப்பு நிறமடைவதை பலரும் காண்கிறோம். அவ்வாறு உங்கள் மல்லிகைப்பயிரில் பூ மொட்டுகள் பழுப்பு நிறமடைந்திருக்கின்றனவா? பாதித்த மலர் கொத்துகளை வளைத்து ஒரு வெள்ளை நிற அட்டையில் தட்டுங்கள். உற்று நோக்கினால், மிகச்சிறிய மெலிந்த பழுப்பு மற்றும் மஞ்சள் நிற பூச்சிகள் விரைந்து நகர்வதைக் காணலாம். இப்பூச்சிகள் மலர்ப்பேன்கள் எனப்படும். இப் பூச்சிகளின் தாக்குதலால் பூ மொட்டுகள் வெண்மை

நிறம் மாறி பழுப்பு நிறமடையும். மலர்க்காம்புகள் சிறுத்துவிடும். மேலும் மலர்ப்பேன் தாக்கிய மொட்டுகள் மலர்ந்து விரிவதில்லை. எனவே இவை சந்தையில் குறைந்த விலைக்கே போகும்.

**உகந்த சூழ்நிலை**: வறண்ட வெப்பமான சூழ்நிலையில் மலர்ப்பேன்கள் விரைந்து பெருகுகின்றன. தொடர்மழை பேன்களின் எண்ணிக்கையினைக் குறைத்துவிடும். தெளிப்பு நீர் பாசன முறையில் பாசனவசதி பெறும் மல்லிகைப்பயிரில் மலர்ப்பேன் தாக்குதல் மிகக் குறைந்தே காணப்படும்.

**இவை விளைவிக்கும் சேதம்**: மலர்ப்பேன்கள் சுமார் ஒரு மில்லிமீட்டர் நீளமானவை. முதிர்ந்த பூச்சிகள் கரும்பழுப்பு நிறத்தில் காணப்படும். குஞ்சுகள் மஞ்சள் நிறைந்தவை. மலர்ப்பேன்களும் அவற்றின் குஞ்சுகளும் மலர் மொட்டுகளின் திசுக்களைச் சுரண்டி வெளியாகும் சாற்றினை உறிஞ்சி குடிக்கின்றன. திசுக்கள் பெருமளவு சுரண்டப் படுவதால் அவை காய்ந்து பழுப்பு நிறமடைந்துவிடுகின்றன. பயிர்ச்சாறு வெளியேறுவதால் மொட்டுகளின் வளர்ச்சி தடைபட்டு அளவு சிறுத்துவிடுகின்றன. காம்புகளின் நீளமும் குறைந்துவிடுகின்றன.

**இவற்றைக் கட்டுப்படுத்த**: சமச்சீரான அளவில் பரிந்துரைக்கப்படும் விகிதத்தில் உரங்கள் இடப்பட்ட பயிர் பூச்சிகளின் சேதத்தினை தாங்கி வளர இயலும். மல்லிகை பயிருக்கு ஆண்டுக்கு இரு தடவையாக அதாவது கவாத்து செய்தவுடன் ஒரு முறையும், ஜூன்,ஜூலை மாதங்களில் மறு முறையுமாக இரு தடவைகளாக கீழ்க்கண்ட உரங்களைப் பிரித்து இடவேண்டும். செடி ஒன்றுக்கு நன்கு மக்கிய தொழு உரம் பத்து கிலோ, தழைச்சத்து 60 கிராம் (யூரியா 130 கிராம்), மணிச்சத்து 120 கிராம் (சூப்பர் பாஸ்பேட் 750 கிராம் அல்லது ஸ்பிக் டி.ஏ.பி.300 கிராம்), சாம்பல் சத்து 120 கிராம் (மியூரியேட் ஆப் பொட்டாஷ் 200 கிராம்) வீதம் தேவை.

வசதிப்படும் இடங்களில் தெளிப்பு நீர்பாசன முறையில் (ஸ்பிரிங்க்ளர் இர்ரிகேஷன்) வறண்ட வெப்பமான மாதங்களில் மட்டும் பாசனம் ஏற்படுத்தலாம். மலர்ப்பேன் தாக்குதல் தீவிரப்பட்டால் மோனோகுரோட்டோ பாஸ் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் முழுவதும் நனையும்படி மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். மேலும் மருந்து கரைசல், பயிரில் குறிப்பாக பூங்கொத்துக்களில் நன்கு படுவதற்காக, வேளாண்மைக்காக திரவ தெளிப்புகளில் (சாண்டோவிட், ஸ்டிக்கால், அக்ரோவெட், ஹைவெட், பைட்டோவெட், இண்ட்ரான் - வணிகப்பெயர்கள்) ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் ஒரு வார இடைவெளியில் மீண்டும் மருந்து தெளிக்க வேண்டும்.

**நிறம் மாறிய மல்லிகை இலைகள்**: உங்கள் மல்லிகைப்பயிரில் இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதைக் கவனித்தி ருப்பீர்கள். இரும்புச்சத்து பற்றாக்குறை, செஞ்சிலந்தி தாக்குதல் என பல்வேறு காரணங்களினால் இந்நிறமாற்றம் ஏற்படலாம். அக்காரணிகளின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து நாம் தெரிந்துகொள்வது அவசியம்.

**இரும்புச்சத்து பற்றாக்குறை**: முதலில் வெளிர் பச்சை நிறம், பின்னர் மஞ்சள் நிறம் இளம்

இலைகளில் தோன்றி, பின்னர் முதிர்ந்த இலைகளுக்குப் பரவினால், இரும்புச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என தெரிந்துகொள்ளலாம். வெப்பமான சூழ்நிலைகளில் சுண்ணாம்பு சத்துமிக்க நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள மல்லிகை பயிரில் இப்பிரச்னை ஏற்பட்டால் பெர்ரஸ் சல்பேட் எனப்படும் அன்னபேதி உப்பினை 0.5 சத அளவில் (ஒ ரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம்) கைத்தெளிப்பான் கொண்டு பயிர் முழுவதும் படும்படி குறிப்பாக இலைகளின் கீழ்புறமும் படும்படி தெளித்தால் சில நாட்களில் பாதித்த இலைகள் மீண்டும் பச்சை நிறம் அடைவதைக் காணலாம்.

பயிரின் வளர்ச்சியினைப் பொருத்து ஏக்கருக்கு 200 முதல் 300 லிட்டர் வரை அன்னபேதிக் கரைசல் தேவைப்படும்.

**செஞ்சிலந்தி தாக்குதல்**: பாதிப்பு முதலில் முதிர்ந்த இலைகளில் தோன்றி பின்னர் இளம் இலைகளுக்கு பரவும். மஞ்சள் நிறப்புள்ளிகளைப் போல் இலைகளின் மேற்புறம் ஏற்படும். பாதிக்கப்பட்ட இலைகளின் பின்புறத்தினை உற்றுநோக்கினால் மெல்லிய நூலாம்படையும் அதனுள் சிவப்புநிற சிறிய பூச்சிகள் மெதுவாக நகர்வதையும் காணமுடியும்.

உருப்பெருக்கி கொண்டு பார்த்தால் அப்பூச்சிகள் எட்டுக்கால்கள் கொண்டனவாக இருப்பதினைக் கவனிக்க இயலும். இப்பூச்சிகள் செவ்வுண்ணி என்றும் அழைக்கப்படும். தாக்குதல் தீவிரப்பட்டால், இலைகள் முற்றிலும் வெளுத்து காய்ந்து கீழே உதிர்ந்துவிடுகின்றன.

வறண்ட வெப்பமான சூழ்நிலையில் செஞ்சிலந்தி தாக்குதல் குறையும். செஞ்சிலந்திப் பூக்களைக் கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று கிராம் வீதம் நனையும் கந்தகம் மருந்தினைக் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

தேவைப்பட்டால், 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். பயிரின் வளர்ச்சியினைப் பொறுத்து ஏக்கருக்கு 200 முதல் 300 லிட்டர் வரை மருந்துக்கரைசல் தேவைப்படலாம். இலையின் அடிப்புறமும் படும்படி தெளிக்க வேண்டும்.

மருந்துக்கரைசலைத் தெளிக்கும்போது பயிரில் நன்கு படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளில் ஒன்றினை (சாண்டோவிட், அக்ரோவிட், ஹைவெப், பைட்டோவெட், ஸ்டிக்கால், இண்ட்ரான் - வணிகப் பெயர்கள்) ஒரு லிட்டர் மருந்துக் கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக்கொள்ள வேண்டும்.

மதுரை மண்டல மல்லிகை விவசாயம் செய்யக் கற்றுக்கொண்டால் வெற்றிகரமான விவசாயிகளாக திகழலாம்.எம்.ஞானசேகர்,விவசாய ஆலோகர், 97503 33829.

## இயற்கை ரப்பர் உற்பத்தி 7 சதவீதம் சரிவு

மே 16,2012,00:54



கொச்சி:சென்ற ஏப்ரல் மாதத்தில், நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 52 ஆயிரத்து 700 டன்னாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, 7.2 சதவீதம் (54 ஆயிரத்து 400 டன்) குறைவு என, ரப்பர் வாரியத்தின் தற்காலிக புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.தொழிலாளர் பற்றாக்குறை, இடைவிடாத மழை போன்ற காரணங்களால், நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது. மதிப்பீட்டு மாதத்தில், இயற்கை ரப்பர் பயன்பாடு, 81 ஆயிரத்து 375 டன்னிலிருந்து, 80 ஆயிரத்து 500 டன்னாக குறைந்துள்ளது.

உள்நாட்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி குறைந்ததை அடுத்து, இதன் இறக்குமதி, 6,518 டன்னிலிருந்து, 17 ஆயிரத்து 509 டன்னாக உயர்ந்துள்ளது. ரப்பர் ஏற்றுமதி, 2,214 டன்னிலிருந்து, 755 டன்னாக குறைந்துள்ளது.மேலும், இதே மாதங்களில், ரப்பர் கையிருப்பு, 2 லட்சத்து 68 ஆயிரத்து 781 டன்னிலிருந்து, 2 லட்சத்து 26 ஆயிரம் டன்னாக குறைந்துள்ளது.இயற்கை ரப்பர் உற்பத்தி, சென்ற 2011-12ம் முழு நிதியாண்டில், 8 லட்சத்து 99 ஆயிரத்து 400 டன்னாகவும், இதன் பயன்பாடு, 9 லட்சத்து 66 ஆயிரத்து 215 டன்னாக உயர்ந்துள்ளது.இதே நிதியாண்டுளில் இயற்கை ரப்பர் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் கையிருப்பு முறையே, 27 ஆயிரத்து 145 டன், 2 லட்சத்து 5 ஆயிரத்து 433 டன் மற்றும் 2 லட்சத்து 30 ஆயிரம் டன் என்றளவில் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கம்மாளப்பட்டியில் தேனீ வளர்ப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் : மே 16,2012,02:58 IST

பனமரத்துப்பட்டி:கம்மாளப்பட்டியில் தோட்டக்கலைத்துறை சார்பில், விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.சேலம் பனமரத்துப்பட்டி யூனியன் கம்மாளப்பட்டியில், தோட்டக்கலைத்துறை சார்பில், 20 விவசாயிகளுக்கு ஐம்பது சத மானியத்தில் தேனீ வளர்ப்பு பெட்டி வழங்கப்பட்டுள்ளது. நேற்று, கம்மாளப்பட்டியில் நடந்த தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சிக்கு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பரணி தலைமை வகித்தார். விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு குறித்து , மதுரையை சேர்ந்த ஜேஸ்பின் பயிற்சி அளித்து பேசிதாவது:விவசாயிகள் தேனீ வளர்ப்பதால், அறுபது சதம் வரையில் பயிர் மகசூல் அதிகரிக்கும். ஒரு தேனீ 50 ஆயிரம் பூக்களை முகர்ந்து தேன் சேகரிப்பதால், விரைந்து நடக்கும் மகரந்த சேர்க்கையால், மகசூல் அதிகரிக்கும். பழங்காலத்தில் முக்கிய உணவு பொருளாக இருந்ததால், நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்தனர்.ஜனவரி, ஃபிப்ரவரி, மார்ச் மாதத்தில் தேன் உற்பத்தி சீசன் காலமாகும். வேம்பு மர பூ தேன், சர்க்கரை நோயாளி சாப்பிட நாவல் மர தேன் மற்றும் குளுக்கோஸ் அதிகம் இருக்கும் சூரியகாந்தி பூவில் இருந்து கிடைக்கும் தேன் என, மூன்று வகை உள்ளது.

பெட்டியில் ஒரு ராணி தேனீ, ஐம்பத்துக்கும் மேற்பட்ட ஆண் தேனீ, ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலைகார தேனீ இருக்கும். ஆண் தேனீ இனபெருக்கம், ராணி தேனீ முட்டை உற்பத்தி ஆகிய பணிகளை மேற்கொள்ளும். அறுபது நாட்கள் மட்டும் உயிருடன் இருக்கும் வேலைக்கார தேனீ தேன் சேகரிப்பு, கூட்டை சுத்தம் செய்தல், தேன் இருக்கும் தகவல் சேகரித்தல், மற்ற தேனீகளுக்கு மருத்துவம் செய்தல், புதிய ராணி தேனீ உருவாக்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும்.தேன் பிறந்த குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் சாப்பிடுவதால், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து உடல் ஆரோக்கியம் பெறும். தேன் கூட்டில் கிடைக்கும் ராயல் ஜெல்லி (ராஜ பாகு) புரோட்டீன் சத்து மிகுதியாக இருப்பதால், மனிதர்கள் நீண்ட நாள் உயிர் வாழ உதவுகிறது. நூறு கிராம் ராயல்ஜெல்லி ரூ1,000 வரையில் விற்கப்படுகிறது.

இதற்கு, கேன்ஸர் உள்ளிட்ட வியாதிகளை தடுக்கும் ஆற்றல் உள்ளது.ஒரு லிட்டர் தேன் ரூ.250 வரையில் விலை கிடைப்பதால், விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். தோட்டக்கலைத்துறை உதவி அலுவலர்கள் தேசிங்கு, குமரவேல் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## தேயிலை ஏல மையத்தில் வரத்து குறைவதால் விலையில் உயர்வு

பதிவு செய்த நாள் : மே 16,2012,04:42 IST

குன்னூர்: நீலகிரியின் பல இடங்களில் கடந்த மாதங்களில் பெய்த ஆலங்கட்டி மழையின் பாதிப்பு பல ஏக்கர் தேயிலை தோட்டங்களை "பதம்' பார்த்தது; இதன் விளைவாக, குன்னூர் தேயிலை ஏலத்திற்கு வரும் தேயிலை தூளின் வரத்து குறையத் துவங்கியுள்ளது.
நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கொலக்கம்பை, பெட்டட்டி, கட்டபெட்டு உட்பட இடங்களில் கடந்த மாதம் துவங்கி அவ்வப்போது லேசானது முதல் பலமான மழை பெய்து வருகிறது; சில இடங்களில் வரலாறு காணாத வகையில் ஆலங்கட்டி மழை பெய்தது. தேயிலை தோட்டங்களின் மீது விழுந்த ஆலங்கட்டி மழையால், சுமார் 800 ஏக்கர் தேயிலை தோட்டங்கள் சேமடைந்தன. விளைவு, சாகுபடிக்கு தயாராக தழைத்து வளர்ந்திருந்த தேயிலை கொழுந்துகள் நாசமாகின. சாகுபடி குறைவால், குன்னூர் தேயிலை மையத்தில் தேயிலை தூளின் வரத்தும் குறையத் துவங்கியுள்ளது.
**அதிகரித்த கிராக்கி:**கடந்த வார தேயிலை ஏலத்தில் மொத்தம் 9.18 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 6.88 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 2.60 கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில் பாகிஸ்தான், ரஷ்ய வர்த்தகர்கள் கை கொடுக்க, ஆந்திரா, கர்னாடகா, குஜராத் உட்பட வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பு குறிப்பிடும் படி இல்லை; வரத்து குறைவாக இருந்தாலும், வர்ததகர்கள் மத்தியில் தேவை அதிகரித்ததால் விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 95 சதவீதம் விற்று தீர்ந்தது; அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 2 ரூபாய் உயர்ந்தது.
விலை நிலவரத்தை பொறுத்தவரை சி.டி.சி., ரகத்தில் கோத்தகிரி விக்னேஷ்வர் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு கிலோ 185 ரூபாய், ஆர்தோடக்ஸ் ரகத்தில் குன்னூர் உட்லாண்ட்ஸ் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு கிலோ 301 ரூபாய் விலை கிடைத்தது. குறைந்தபட்ச விலை 48ல் இருந்து 51 ஆக அதிகரித்தது. வரும் 17,18 தேதிகளில் நடக்கவுள்ள விற்பனை எண் 20க்கான ஏலத்திற்கு வெறும் 8.90 லட்சம் கிலோ தேயிலை தூள் மட்டுமே விற்பனைக்கு தயாராக உள்ளது.
**மழையால் திருப்தி:**தேயிலை மகசூல் அதிகரிக்க வேண்டிய இக்கால கட்டத்தில் மகசூல் குறைந்து வருவது, விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது; இதற்கு, கடந்த மாதங்களில் பெய்த ஆலங்கட்டி மழையே காரணம். ஆலங்கட்டி மழையால், சேதமான தேயிலை தோட்டங்களில் மீண்டும் மகசூல் துவங்க மூன்று மாதங்கள் பிடிக்கும், என தெரிவிக்கப்பட்டிருந்தது.
ஆனால், கடந்த சில நாளாக தொடர்ந்து பெய்து வரும் கோடை மழை, தேயிலை தோட்டங்களுக்கு ஏற்றதாக உள்ளது. இதனால், தேயிலை தோட்டங்களில் மகசூல் களைகட்ட துவங்கியுள்ளது; தேயிலை செடிகளை தாக்கியிருந்த சிவப்பு நிற சிலந்திகளின் தாக்குதலும்,

தொடர்ந்து பெய்யும் மழையால், சீராக துவங்கியுள்ளன; இதனால், வரும் காலங்களில் மகசூல் அதிகரிக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது.

### விவசாயிகள்குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நாள் : மே 16,2012,02:49 IST

சிவகங்கை : சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் மே 18 அன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது. அன்று காலை 10.30 மணிக்கு நடக்கும் கூட்டத்தில் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம், என கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

---

தினகரன்

### சிறுவாணியில் நீர் இருப்பு 3.59 மீட்டர் மட்டுமே

பதிவு செய்த நேரம்:2012-05-15 10:30:44

கோவை: சிறுவாணி அணையில் 3.59 மீட்டர் மட்டுமே நீர் இருப்பு உள்ளது.
சிறுவாணி அணையின் அதிகபட்ச நீர் மட்ட உயரம் 878.50 மீட்டர் (கடல் மட்ட உயர கணக்கின் படி). நேற்று அணை நீர் மட்டம் 867.09 மீட்டராக இருந்தது. இன்னும் 3.59 மீட்டர் அளவிற்கு மட்டுமே குடிநீர் இருப்பு உள்ளது. அணையில் இருந்து நேற்று 7.5 கோடி லிட்டர் குடிநீர் பெறப்பட்டது. தினமும் 7.5 கோடி முதல் 8 கோடி லிட்டர் வரை குடிநீர் பெறப்படுகிறது. தினமும் அணை நீர் மட்டம் 9 முதல் 11 செ.மீ அளவிற்கு குறைந்து வருகிறது. இன்னும் 2 மீட்டர் அளவிற்கு மட்டுமே தடையின்றி குடிநீர் பெறமுடியும். அதாவது 15 முதல் 18 நாளுக்கு மட்டுமே குடிநீர் தடையின்றி கிடைக்கும். கடந்த 9ம் தேதி அணை நீர்மட்டம் இறுதி கட்ட இருப்பு (டெத் ஸ்டோரேஜ்) அளவை எட்டி விட்டது. இன்னும் 15 நாளுக்கு பிறகு அணை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பெறுவதில் சிரமம் ஏற்படும். அணைப்பகுதியில் ஆங்காங்கே தீவு போல் நீர் தேங்கியுள்ளது. இந்த நீரை ஒருங்கிணைத்து நீரேற்று நிலையத்திற்கு கொண்டு வர ஏற்கனவே வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே உள்ள மண் திட்டுகள், நீரேற்று நிலையத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு தடையாக இருக்கின்றன. இந்த மண் திட்டுக்களை அகற்றி நீரேற்று நிலையத்திற்கு தண்ணீரை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.